சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2013–2014ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட 26 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 624 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.04.2018 முதல் 31.3.2021 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை

அரசாணை (1டி) எண். 302

நாள்: 26.04.2018
(திருவள்ளுவராண்டு 2049, சித்திரை 13)

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள். 20.03.2013.
2. அரசாணை (நிலை) எண்.52, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள்.26.02.2016.
3. அரசாணை (1டி) எண்.506, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள்.22.08.2017.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின்கடித ந.க.எண். 086270/எல்/இ3/2017, நாள்14.03.2018.

*********

ஆணை:–

மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் தமிழகத்தில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கும் திட்டத்தின்படி முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் 18 ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டும், இப்பள்ளிகளுக்கு உரிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டும், தற்போது இப்பள்ளிகள் 6 முதல் 12 வகுப்புகள் கொண்ட மேல்நிலைப் பள்ளிகளாகவும் நடைபெற்று வருகின்றன.

2) இதனை தொடர்ந்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இரண்டாம் கட்டமாக 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 26 ஒன்றியங்களில் 26 மாதிரிப் பள்ளிகள் 6 முதல் 12 வகுப்புகள் கொண்ட பள்ளிகளாக 2013–2014ஆம் கல்வியாண்டில் தொடங்கிடவும், இம்மாதிரிப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு 17 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியரல்லாத பணியிடங்கள் என 624 பணியிடங்களைத் தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3) இந்நிலையில் மத்திய அரசு, 2015–2016ஆம் ஆண்டிலிருந்து மாதிரிப் பள்ளிகளை மத்திய அரசிடமிருந்து விடுவித்து அப்பள்ளிகளுக்கான செலவினங்களை மாநில அரசே மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளதனையடுத்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் 624 தற்காலிக பணியிடங்களுக்கான செலவினத்தை மாநில அரசே மேற்கொள்ள ஏதுவாக உரிய ஆணை வெளியிடப்பட்டது.

4) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 624 தற்காலிக பணியிடங்களுக்கு கடைசியாக 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காண் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு காலம் 31.03.2018 உடன் முடிவுறுவதால், மேற்குறிப்பிட்டுள்ள 442 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 182 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஆக மொத்தம் 624 தற்காலிக பணியிடங்களுக்கு 01.04.2018 முதல் 31.3.2019 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6) பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, 2013–14ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட இவ்வரவாணையின் இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ள 26 ஒன்றியங்களில் உள்ள 26 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட இவ்வரவாணையின் இணைப்பு–IIல் குறிப்பிடப்பட்டுள்ள 442 ஆசிரியர் மற்றும் 182 ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஆக மொத்தம் 624 தற்காலிக பணியிடங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித்துறையின் மறுஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அது வரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மேலே பத்தி 6ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள 624 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2202 – பொதுக்கல்வி –02 – இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப்பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – KI அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் மாதிரிப் பள்ளிகள் தோற்றுவித்தல் – 01 சம்பளங்கள். " (த.தொ.கு 2202–02–109–KI–0102).

8) இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.19583/கல்வி–II/2018, நாள்.24.04.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், சென்னை–6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல / சார் கருவூல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
<u>நகல்</u>
நிதித் (கல்வி–II/வரவு செலவு / (பொது–II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/4/18

அரசு சார்புச் செயலாளர்

26.4.18

## இணைப்பு–I

**அரசாணை (1டி) எண்.302, பள்ளிக் கல்வித்(பக5) துறை, நாள் 26.04.2018.**

2013–14ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 26 ஒன்றியங்களில் தொடங்கப்பட்ட 26 மாதிரிப் பள்ளிகள் விவரம் :–

| | | |
|---|---|---|
| பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை : | | அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் (சி2)துறை, நாள்: 20.03.2013. |
| கடைசியாக தொடராணை வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் : | | அரசாணை (1டி) எண்.506, பள்ளிக் கல்வி (அகஇ)துறை, நாள்: 22.08.2017. [01.04.2017 முதல் 31.03.2018 வரை] |
| தொடராணை வழங்கும் காலம் : | | **01.04.2018 முதல் 31.03.2021 வரை** |
| **வ.எண்** | **மாவட்டம்** | **ஒன்றியம்** |
| 1 | அரியலூர் | 1. அரியலூர் |
| 2 | கடலூர் | 2. மங்களூர் |
| 3 | தர்மபுரி | 3. காரிமங்கலம் |
| | | 4. பாலக்கோடு |
| 4 | ஈரோடு | 5. சத்தியமங்கலம் |
| | | 6. தாளவாடி |
| | | 7. அந்தியூர் |
| 5 | திருப்பூர் | 8. குண்டடம் |
| 6 | கிருஷ்ணகிரி | 9. தளி |
| | | 10. வேப்பனபள்ளி |
| 7 | பெரம்பலூர் | 11. வேப்பூர் |
| 8 | சேலம் | 12. நங்கவள்ளி |
| | | 13. சங்ககிரி |
| | | 14. வீரபாண்டி |
| | | 15. பெத்தநாயக்கன்பாளையம் |
| | | 16. தாரமங்கலம் |
| | | 17. கொளத்தூர் |
| | | 18. மகுடஞ்சாவடி |
| | | 19. பனமரத்துப்பட்டி |
| | | 20. ஏற்காடு |
| 9 | திருவண்ணாமலை | 21. ஜவ்வாது மலை |
| 10 | விழுப்புரம் | 22. திருநாவலூர் |
| | | 23. திருவெண்ணைநல்லூர் |
| | | 24. சங்கராபுரம் (கல்வராயன் மலை) |
| | | 25. உளுந்தூர்பேட்டை |
| 11 | நாமக்கல் | 26. மல்லசமுத்தரம் |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 26-4-18

26-4-18

## இணைப்பு–II

**அரசாணை (1டி) எண்.302, பள்ளிக் கல்வித்(பக5) துறை, நாள் 26.04.2018.**

2013–14ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 26 ஒன்றியங்களில் தொடங்கப்பட்ட 26 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் விவரம் :–

| | |
|---|---|
| பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை : | அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் (சி2)துறை, நாள்: 20.03.2013. |
| கடைசியாக தொடராணை வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் : | அரசாணை (1டி) எண்.506, பள்ளிக் கல்வி (அகஇ)துறை, நாள்: 22.08.2017. [01.04.2017 முதல் 31.03.2018 வரை] |
| தொடராணை வழங்கும் காலம் : | **01.04.2018 முதல் 31.03.2021 வரை** |

**அ) ஆசிரியர் பணியிடங்கள் (ஒரு பள்ளிக்கு)**

| வ. எண் | பணியிடம் | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தலைமையாசிரியர் | நிலை : 23, ரூ.56,900–1,80,500/– | 1 |
| 2 | முதுகலையாசிரியர் (தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல்) | நிலை : 18, ரூ.36,900–11,66,00/– | 7 |
| 3 | பட்டதாரி ஆசிரியர் (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல்) | நிலை : 16, ரூ.36,400–1,15,700/– | 5 |
| 4 | கணினி ஆசிரியர் (பட்டதாரி ஆசிரியர் நிலையில்) | நிலை : 16, ரூ.36400–1,15,700/– | 1 |
| 5 | உடற்கல்வி ஆசிரியர் | நிலை–10, ரூ.20,600–65,500/– | 1 |
| 6 | இசை ஆசிரியர் | நிலை–10, ரூ.20,600–65,500/– | 1 |
| 7 | ஓவிய ஆசிரியர் | நிலை–10, ரூ.20,600–65,500/– | 1 |
| | | | 17 |

**ஆ) ஆசிரியரல்லாத பணியிடங்கள் (ஒரு பள்ளிக்கு)**

| வ.எண் | பதவி | ஊதிய விகிதம் (ரூபாய்) | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | தொகுப்பூதியம் ரூ.6000 | 1 |
| 2 | நூலகர் | தொகுப்பூதியம் ரூ.6000 | 1 |
| 3 | ஆய்வக உதவியாளர் | தொகுப்பூதியம் ரூ.6000 | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | தொகுப்பூதியம் ரூ.4500 | 1 |
| 5 | கூட்டுபவர்/துப்புரவுப் பணியாளர் | தொகுப்பூதியம் ரூ.4500 | 1 |
| 6 | இரவு காவலாளி | தொகுப்பூதியம் ரூ.4500 | 1 |
| 7 | தோட்டக்காரர் | தொகுப்பூதியம் ரூ.4500 | 1 |
| | மொத்தம் | | 7 |

மொத்த பணியிடங்கள் விவரம் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | 26 மாதிரிப் பள்ளிகள் | 17 ஆசிரியர் பணியிடங்கள் வீதம் | 442 |
| 2. | 26 மாதிரிப் பள்ளிகள் | 7 ஆசிரியரல்லாத பணியிடங்கள் வீதம் | 182 |
| | | மொத்தம் | 624 |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
26-4-18

26-4-18

சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2008–09 மற்றும் 2009–10ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து துவக்கப்பட்ட மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 1,512 தற்காலிக பணியிடங்கள் – இவற்றில் 912 பணியிடங்களுக்கு 01.01.2018 முதல் 31.12.2018 வரையிலும் மற்றும் 600 பணியிடங்களுக்கு 01.07.2018 முதல் 31.12.2020 வரையிலும் தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை.

அரசாணை (1டி) எண். 297 நாள்: 24.04.2018
(திருவள்ளுவராண்டு 2049, சித்திரை 11)

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி(இ1) துறை, நாள்: 15.05.2008
2. அரசாணை (நிலை) எண்.109, பள்ளிக் கல்வி(இ1) துறை, நாள்: 04.05.2009.
3. அரசாணை (நிலை) எண்.162, பள்ளிக் கல்வி(இ1) துறை, நாள்: 13.07.2009.
4. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி(மேநிக2)துறை, நாள்.24.04.2009.
5. அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக்கல்வி(மேநிக2) துறை, நாள்.15.07.2009
6. அரசாணை (நிலை) எண்.232, பள்ளிக் கல்வி(இ1) துறை, நாள் 11.08.2010.
7. அரசாணை (1டி) எண். 348, பள்ளிக் கல்வி(பக5) துறை, நாள் 14.06.2017.
8. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.085227/எல்/இ3/2017, நாள்.14.03.2018.

––––

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2008–09ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டு, அவ்வாறு நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2008–09ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2009–10ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் நிலையுயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு 500 முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2009–10ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு இப்பள்ளிகளுக்கு 2009–10ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010–11ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

3) மேலே மூன்றவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2009–10ஆம் கல்வியாண்டில் 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, இப்பள்ளிகளுக்கு 2009–10 ஆம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2010–11 ஆம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

4) மேலே நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், 2009–10ஆம் கல்வியாண்டில் முறையே 100 மற்றும் 15 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, பள்ளிக்கு 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 575 (115 x 5 = 575) முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

5) மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2009–10ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட 7 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 7 தற்காலிக தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

6) மேலே ஏதாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் அரசாணைகளின்படி 2008–09 மற்றும் 2009–10ஆம் கல்வியாண்டுகளில் நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 1,512 தற்காலிக பணியிடங்களுக்கு இறுதியாக, இவற்றில் 912 தற்காலிக பணியிடங்களுக்கு (330 பட்டதாரி ஆசிரியர், 575 முதுகலை ஆசிரியர், 7 உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள்) 01.01.2017 முதல் 31.12.2017 வரையிலும் மற்றும் 600 தற்காலிக பணியிடங்களுக்கு (100 பட்டதாரி ஆசிரியர், 500 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள்) 01.07.2017 முதல் 30.06.2018 வரையிலும் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளன.

7) மேலே பத்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2008–09 மற்றும் 2009–10ஆம் கல்வியாண்டுகளில் நிலை உயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட மேற்காண் 430 பட்டதாரி மற்றும் 1075 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட 7 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 7 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1,512 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2018 மற்றும் 01.07.2018 முதல் 31.12.2018 வரை தொடர் நீட்டிப்பு வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

8) பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலே 1 முதல் 6 வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி 2008–09 மற்றும் 2009–10ஆம் கல்வியாண்டுகளில் நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 1,512 தற்காலிக பணியிடங்களில், மேலே 7ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இறுதியாக 31.12.2017 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட **912 தற்காலிக பணியிடங்களுக்கு** [330 பட்டதாரி ஆசிரியர்–புதிய ஊதிய விகிதம்: நிலை–16, ரூ.36,400–1,15,700/–; 575 முதுகலை ஆசிரியர் – புதிய ஊதிய விகிதம் : நிலை–18, ரூ.36,900 –1,16,600/– ; மற்றும் 7 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் – புதிய ஊதிய விகிதம் : நிலை–18, ரூ.36,900–1,16,600/– ] **01.01.2018**

முதல் **31.12.2018 வரையிலும்** மற்றும் இறுதியாக 30.06.2018 வரை தொடர்நீட்டிப்பு வழங்கப்பட்ட **600 தற்காலிக பணியிடங்களுக்கு** [100 பட்டதாரி ஆசிரியர் –புதிய ஊதிய விகிதம்: நிலை-16, ரூ.36,400–1,15,700/–; 500 முதுகலை ஆசிரியர் – புதிய ஊதிய விகிதம் : நிலை–18, ரூ.36,900 –1,16,600/– ] **01.07.2018 முதல் 31.12.2020** வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்து நிதித்துறையின் மறுஆய்வில் முடிவெடுக்கும் வரை எது முந்தையதோ அது வரை மொத்தம் 1,512 தற்காலிக பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

9) இப்பணியிடங்களுக்கான செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-</u>

"2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 01 சம்பளங்கள். (து.தொ.கு. 2202–02–109 AA –0108).

<u>நகராட்சி/ மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:-</u>

"2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள். (து.தொ.கு. 2202–02–109–AB–0106).

10) இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பப்படும் போது புத்தாக்கம் செய்து நிரப்ப வேண்டும், மற்றும், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்கள் தேவை குறித்து உரிய ஆய்வு செய்து உபரி பணியிடங்கள் இருப்பின், அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

11) மேலே பத்தி–8ல் தெரிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி அனுமதிக்கப்படும் ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் இதர படிகளையும் பெறத் தகுதி உடையவர்களாவார்கள்.

12) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20783/கல்வி–II/2018,நாள்.20.04.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர் , சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / 35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.

# இணைப்பு

## அரசாணை (1டி) எண்.297, பள்ளிக்கல்வி[பக5(1)]துறை, நாள்: 24.04.2018

2008–09 மற்றும் 2009–10–ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து துவக்கப்பட்ட மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 1,512 பட்டதாரி ஆசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரிய‘ர் தற்காலிக பணியிடங்கள் விவரங்கள் :–

| அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300–34,800 + 4600 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை–16, ரூ.36,400–1,15,700/– |
| முதுகலை பட்டதாரி ஆசிரியர்<br>உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300–34,800 + 4800 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை–18, ரூ.36,900 –1,16,600/– |

| வ. எண். | பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை | பள்ளிகளின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்ட அரசாணை | பணியிட விவரம் | கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் | தற்போது தொடர் நீட்டிப்பு வழங்கப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி, நாள்.15.05.2008. | அரசாணை (நிலை) எண்.121, பள்ளிக் கல்வி, நாள் .06.06.2008. | 100 பட்டதாரி ஆசிரியர்கள். (2008–09 ஆம் ஆண்டு) | அரசாணை (1டி) எண்.348, பள்ளிக் கல்வித் துறை, நாள். 14.06.2017.<br>(01.07.2017 முதல் 30.06.2018 வரை) | 01.07.2018 முதல் 31.12.2020 வரை |
| | | | 100 பட்டதாரி ஆசிரியர்கள் (2009–10 ஆம் ஆண்டு) | அரசாணை (1டி) எண்.348, பள்ளிக் கல்வித் துறை, நாள். 14.06.2017.<br>(01.01.2017 முதல் 30.12.2017 வரை) | 01.01.2018 முதல் 31.12.2018 வரை |
| | | (i) அரசாணை (நிலை) எண்.122, பள்ளிக் கல்வி, நாள். 06.06.2008.<br>(ii) அரசாணை (நிலை) எண்.131, பள்ளிக்கல்வி, நாள்.17.06.2008. | 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள். | அரசாணை (1டி) எண்.348, பள்ளிக் கல்வித் துறை, நாள். 14.06.2017.<br>(01.07.2017 முதல் 30.06.2018 வரை) | 01.07.2018 முதல் 31.12.2020 வரை |
| 2. | அரசாணை (நிலை) எண்.109, பள்ளிக்கல்வி, நாள் 04.05.2009. | அரசாணை (நிலை) எண்.129, பள்ளிக்கல்வி, நாள் 15.06.2009. | 100 பட்டதாரி ஆசிரியர்கள் (2009–10 ஆம் ஆண்டு) | அரசாணை (1டி) எண்.348, பள்ளிக் கல்வித் துறை, நாள். 14.06.2017.<br>(01.01.2017 முதல் 30.12.2017 வரை) | 01.01.2018 முதல் 31.12.2018 வரை |
| | | | 100 பட்டதாரி ஆசிரியர்கள் (2010–11 ஆம் ஆண்டு.) | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | அரசாணை (நிலை) எண். 162, பள்ளிக் கல்வி, நாள்.13.07.2009. | (i) அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக்கல்வி, நாள்.15.07.2009<br>(ii )அரசாணை (நிலை) எண்.172, பள்ளிக்கல்வி, நாள்.16.07.2009.<br>(iii)அரசாணை (நிலை) எண்.186, பள்ளிக்கல்வி, நாள்.28.07.2009.<br>(iv) அரசாணை (நிலை) எண்.256, பள்ளிக்கல்வி, நாள்.01.10.2009. | 15 பட்டதாரி ஆசிரியர்கள். (2009–10 ஆம் ஆண்டு)<br>15 பட்டதாரி ஆசிரியர்கள். (2010–11 ஆம் ஆண்டு) | அரசாணை (1டி) எண்.348, பள்ளிக் கல்வித் துறை, நாள். 14.06.2017.<br>(01.01.2017 முதல் 30.12.2017 வரை) | **01.01.2018 முதல் 31.12.2018 வரை** |
| 4. | அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி, நாள்–24.04.2009 | அரசாணை (நிலை) எண்.127 பள்ளிக் கல்வி, நாள்.15.06.2009. | 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள். | | |
| 5. | அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக்கல்வி, நாள்.15.07.2009. | (i) அரசாணை (நிலை) எண்.171,பள்ளிக்கல்வி, நாள்–16.07.2009.<br>(ii) அரசாணை (நிலை) எண்.188, பள்ளிக்கல்வி, நாள்–28.07.2009.<br>(iii) அரசாணை (நிலை) எண்.252, பள்ளிக்கல்வி, நாள்–01.10.2009. | 75 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள். | | |
| 6. | அரசாணை(நிலை) எண்.232, பள்ளிக்கல்வி, நாள். 11.08.2010. | – | 7 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் | | |
| | மொத்தம் | | **1,512 பணியிடங்கள்.**<br>(பட்டதாரி ஆசிரியர்– 430<br>முதுகலை ஆசிரியர்–1075<br>தலைமை ஆசிரியர் – 7 ) | | |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்